அ.வ.எண்.42/2014
நாள்.15/07/2019
<u>பெயர்-மணிவேல் த.பெ. அண்ணவேல்</u>
<u>வாதி தரப்பு 3ம் சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்</u>
<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் மாம்பாடி பூதிநத்தம் என்ற ஊரில் குடியிருந்து வருகிறேன். தாவா சொத்து பூதிநத்தம் கிராமத்தில உள்ளது. தாவா சொத்தின் ச.எண் என்ன என்று தெரியாது. தாவா சொத்து எத்தனை ஏக்கர் என்று தெரியாது. தாவா சொத்தின் கிரய பத்திரம் யார் பெயரில் உள்ளது என்ற விவரம் தெரியாது. பட்டா, சிட்டா, அடங்கல் யார் பெயரில் உள்ளது என்ற விவரம் தெரியாது. வழக்கு விவரம் தெரியாது. ஏற்கனவே 2003 ல் நடந்த வழக்க யார் யார் பெயரில் தாக்கல் செய்தார் என்று தெரியாது. யார் பக்கம் தீர்ப்பானது என்றும் தெரியாது. முருகன் வெங்கடேசன் ஆகியார் பக்கத்து நிலத்துக்காரர் என்பதால் தெரியும். முருகன் வெங்கடேசனுக்கு எவ்வளவு நிலம் உள்ளது என்று தெரியாது. தாவா சொத்தில் என்ன பயிர் உள்ளது என்றால் பயிர் ஏதுமில்லை. மேற்படி முருகன் அவர்களது ஆட்கள் தடுத்து நிறுத்தியதாக சொன்ன தேதி எனக்கு தெரியாது. நான் மேற்படி சம்பத்தை நேரடியாக பார்தேன். மேற்படி சம்பவம் சுமார் 5 வருடத்திற்கு முன்பு நடந்தது. ரவி, கார்ல்மார்க்ஸ், புத்திரன் ஆகியோரை எனக்கு தெரியாது. ஆனால் அவர்கள் அரூரை சேர்ந்தவர்கள். தாவா சொத்து யர் மூலமாக வாங்கியது என்று தெரியாது. மேலும் பிரதிவாதிகள் பூபதி ரவி கார்ல்மாக்ஸ் ஆகியோருக்கு எவ்வாறு பாத்தியம் என்று தெரியாது. தாவா சொத்துக்களை எந்த ஆவணத்தையும் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் வெங்கடேசன் ஒரே ஊர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் மாம்பாடி கிராமத்தில் தான் குடியிருந்து வருகிறேன் என்பதற்கு ஆவணம் எதுவுமில்லை. நான் அங்கு குடியிருக்கவில்லை என்றாலும் பொய் சாட்சி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.